1980 பிப்ரவரி 6]

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளிலும் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் சொந்த மாவட்டத்திலோ வட்டத்திலோகூட பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் பொறியாளர்கள் மட்டும் சொந்த மாவட்டத்தில், வட்டத்தில் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அந்த நிலையை மாற்றி எல்லா அதிகாரிகளுக்கும் சம உரிமை வழங்கக்கூடிய முறையிலே அவர்களும் சொந்த மாவட்டத்தில், வட்டத்தில் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, சில பிரச்சினைகளும் குறைபாடுகளும் இருந்ததால் அதை மக்கள் பிரதிநிதிகள் அரசுக்குத் தெரிவித்ததால் தான் இந்த நிலை ஏற்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 62, 63 அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க பிறகு எடுத்துக் கொள்கிறேன்.

கிருஷ்ணகிரியில் பயணியர் ஓட்டல்

*வினா எண். 64 டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் கிருஷ்ணகிரியில் (தருமபுரி மாவட்டம்) ஓர் ஓட்டல் நடத்த ஏதேனும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

திரு ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): அரசின் பரிசீலனையில் ஓட்டல் நடத்தும் செயற்குறிப்பு இல்லை. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கிருஷ்ணகிரியில் ஒரு ''சாலை ஓர தங்கும் விடுதி'' அமைக்கும் செயற்குறிப்பினை பரிசீலனை செய்து வருகிறது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரிப் பகுதியானது, ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய மத்திய பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தினால், மேலும் தர்மபுரி மாவட்டம் வளர்ந்துவரும் பகுதியாக இருப்பதால், கிருஷ்ணகிரியிலே அதை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா? அது மட்டுமல்ல. ஓசூரில் கட்டப்படுகிற சுற்றுலா வளர்ச்சி ஓட்டல் எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, ஒசூரில் கட்டுவதாக இருந்த ஒட்டலை அங்கே கட்டுவதைவிட, பெங்களூருக்குச் செல்கின்ற பெருவழிச் சாலை சந்திக்கும் இடமாகவும்' சேலம் செல்பவர்கள் போகின்ற பெருவழிச் சாலை சந்திக்கும் இடமாகவும் கிருஷ்ணகிரி இருக்கிற காரணத்தால் அதை ஒசூரில் கட்டுவதைவிட கிருஷ்ண கிரியில் கட்டுவது நல்லது என்று முடிவெடுக்கப்பட்டு அங்கே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

தொலைக்காட்சியில் திரைப்படப் பிரிவு வெளியீடுகள்

*வினா எண். 65 திரு யா. சை. மு. யூசப்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையிலிருந்து ஒளிபரப்பும் தொலைக்கண் காட்சியில் மத்திய அரசின் தகவல் துறையின் செய்தி திரைப் படம் வெளியிடுவது போல, மாநில அரசின் செய்தி மக்கள் நலத்துறை மூலம் வெளியிடப்படும் திரைப்படங்களும் வெளியிடக் கோரி மாநில அரசு, மத்திய அரசுக்குக் கோரிக்கை விட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு திரைப்படப் பிரிவால் தயாரிக்கப்பட்ட சில படங்கள் தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்படுகின்றன.

(முற்பகல் 9.10)

திரு. யா. சை. மு. யூசப்: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலிருந்து தயாரிக்கப்படும் செய்திப் படங்கள், தமிழக அரசால் ஒளிபரப்பப்படுகின்றனவா? வாரத்தில் எத்தனைமுறை ஒளிபரப்பப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன்: (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு நிர்வாகத்திற்கு உட்பட்ட தொலைக்காட்சி நிறுவனத்தாரிடம் 21-2-79 அன்று கடிதம் மூலம், தமிழக அரசு தயாரிக்கின்ற செய்திப் படங்களையும், அதோடு, விவசாய வளர்ச்சிக்கான, ஏனைய இலாக்காக்களினுடைய செயல் திட்டங்களை விளக்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களையும் வெளியிட வேண்டுமென்று, ஒளி பரப்ப வேண்டுமென்ற வேண்டுகோள் விடப்பட்டு, அந்த வேண்டுகோள் தொலைக்காட்சி நிறுவனத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செய்தி மலர் 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 206 ஆகிய செய்திப்படங்கள் தொலைக்காட்சி நிலையத்திற்கு